32 T I

Grade 12

வணிகக் கல்வி I

01 மணித்தியாலம்

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. கீழே தரப்பட்டுள்ளவை வணிக வகைப்படுத்தல் இதுவாகும்.

A - கைத்தொழில் B - பொது
C - முதனிலை D - சேவை
E - விவசாயம் F - மூன்றாம் நிலை
G - தனியார் H - இரண்டாம் நிலை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் உற்பத்தித் துறை (தொழில் மூலத்திற்கு) ஏற்ப வகைப்படுத்தின் இதில் அடங்குபவை

1) CFH 2) AGH 3) AEH 4) ADE 5) BDG (..........)

02. வணிகமொன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடியஅநிச்சயமற்ற தன்மை, நட்டம் ஏற்படக்கூடிய நிலைமை, கடன் போன்ற காரணிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இது வணிகமொன்றின் பண்புகளுள் எதனுள் அடக்கலாம்?

1) விற்பனை அல்லது பரிமாற்று இடம்பெறல்
2) இடரொன்று காணப்படல்.
3) கொடுக்கல் வாங்கல் தொடர்ச்சியாக இடம்பெறல்.
4) பொருட்கள், சேவைகளினது கொடுக்கல், வாங்கல் இடம் பெறல்.
5) இலாபத்தினால் ஊக்குவிக்கப்படல் (..........)

03. வணிகமொன்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தும் அண்மிய சூழல் காரணியாக இருப்பது

1) போட்டியாளர் 2) வழங்குனர் 3) உரிமையாளர்
4) எதிர்கால முதலீட்டாளர் 5) வாடிக்கையாளர் (..........)

04. வணிகமொன்றின் சமூகப் பொறுப்புகளும், வணிக விழுமியங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

A - நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல்.
B - நியாயமாகவும், நேர்மையாகவும் போட்டியிடல்
C - உண்மையான தகவல்களைப் பரிமாறுதல்.
D - சூழல் மாசுபடுவதனை இழிவுபடுத்தல்
E - ஊழியர்களது தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
F - மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் செயற்படல்

மேற்கூறியவற்றுள் வணிக விழுமியங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு செய்யின் அது,

1) ABC 2) ACF 3) BCF 4) ADE 5) BDF (..........)

05. அரசின் பொருளாதார நோக்கங்களும், வணிகங்கள் இந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான *பங்களிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

*வரிக்கொடுப்பனவு *வேலை வாய்ப்புக்குப் பங்களித்தல்.
*பொருளாதார நிலைப்புத் தன்மை *பூரண வேலை வாய்ப்பு மட்டத்தை பேணல்
*உள்நாட்டு வளப் பயன்பாடு *சாதகமான சர்வதேச வியாபாரத்தை பேணல்
*அரச சட்ட திட்டங்களைப் பின்பற்றுதல் *நியாயமான வளப் பங்கீடு

மேற்கூறியவற்றுள் அரசின் பொருளாதார நோக்கங்களின் எண்ணிக்கையாகக் கொள்ளக் கூடியது?

1) மூன்று 2) நான்கு 3) ஐந்து 4) ஆறு 5) ஏழு

(..........)

06. தனியாள் உரிமை வணிகமொன்றினைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பிரதேச செயலாளரினால் விடயங்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் வணிகப் பெயர் பதிவுச் சான்றிதழ் வழங்கல்.

B - உரிய பிரதேச கிராம உத்தியோகத்தரிடமிருந்து வணிகத்தைப் பதிவு செய்வதற்கான அறிக்கையினைப் பெறல்.

C - வணிகம் ஆரம்பிக்கப்படும் பிரதேச செயலாளர் காரியாலயத்திலிருந்து தனியாள் உரிமை வணிகத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெறல்.

D - கிராம அதிகாரியின் அறிக்கை, பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றைப் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கூறின் சரியானது.

1) $A \rightarrow C \rightarrow D \rightarrow B$ 2) $C \rightarrow B \rightarrow D \rightarrow A$ 3) $C \rightarrow A \rightarrow B \rightarrow D$

4) $D \rightarrow B \rightarrow A \rightarrow C$ 5) $B \rightarrow C \rightarrow A \rightarrow D$ (..........)

07. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள் தொடர்புபட்ட விடயங்கள் x நிரலிலும் அதற்கான விபரங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

x நிரல்	Y நிரல்
A - பங்குப் பிளவு	1. விலை கூறப்பட்ட பொதுக் கம்பனியினை அடையாளப்படுத்துவதாகும்
B - முன் விபரணம்	2. கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் பங்குாரர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படாது.
C - உரித்து வழங்கல்	3. கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் பங்குதாரர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும்.
D - பீ.எல்.சீ (PLC)	4. பொதுக்கம்பனியின் பங்குகளை அல்லது தொகுதிக்கடன் பத்திரங்களை வாங்குமாறு தூண்டி பொது மக்களுக்கு அழைப்பு விடும் ஆவணம்.

X நிரலுக்கு ஏற்ப Y நிரலை ஒழுங்குபடுத்தின் சரியானது

1) A - 3 B - 4 C - 2 D - 1

2) A - 2 B - 4 C - 3 D - 1

3) A - 2 B - 3 C - 1 D - 4

4) A - 2 B - 1 C - 1 D - 3

5) A - 2 B - 4 C - 1 D - 3 (..........)

08. நிரந்தர வங்கி மேலதிகப் பற்றுக்குரிய பண்பாகக் கொள்ள முடியாதது

1) எழுத்து மூலம் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.
2) அனுமதிக்கப்பட்ட தொகையிலிருந்து பற்றுதல் செய்யப்படும் தொகைக்கே வட்டி அறவிடப்படும்.
3) நீண்ட காலத்திற்குப் பெற்றுக் கொள்ள முடியும்.
4) உயர் வட்டி வீதம் அறவிடப்படும்
5) ஆதனம்/சொத்துக்கள் பிணை வைத்தல் வேண்டும்.

09. “சந்தையில் ஏற்படும் மாற்றங்களை வணிகத்திற்கான வாய்ப்பொன்றாகக் கருதும் நபர் முயற்சியாளராகும். புத்தாக்கம் புனைதலே அவரது ஆயுதமாகும்” என முயற்சியாளர் தொடர்பில் வரைவிலக்கணம் கூறியவர்.

1) ஜோஸப் சூம் பீட்டர் 2) பீட்டர் எப் றக்கர் 3) வில்லியம் டீ பைகிரோவ்

4) றிச்சார்ட் நன்டினட் 5) மேரி பார்க்கர் பொலட்.

10. சிறிய, நடுத்தர வணிகங்களை வகைப்படுத்தும் போது அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் அளவு ரீதியான நியமமாகக் கொள்ளக் கூடியது.
   1) பயன்படுத்தும் முகாமைத்துவம்   2) வணிகத் தன்மை   3) சந்தையின் தன்மை
   4) பயன்படுத்தும் ஊழியர் எண்ணிக்கை   5) பயன்படுத்தும் தொழில் நுட்பம்

11. சாமந்தி வணிகம் இலங்கையிலுள்ள வணிக வங்கியில் பல்வேறு வகையான கணக்குகளைப் பேணிக் கொள்வதன் மூலம் அநுகூலங்களைப் பெற்றுக் கொள்கின்றது.
   * மீதியின் அடிப்படையில் வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல்.
   * காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்தல்.
   * நிலையான கட்டளையின் பேரில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
   * குறித்த காலப்பகுதிக்கு குறித்த தொகைப்பணத்தினை வைப்பிலிட்டு உயர் வட்டி வருமானத்தைப்பெறல்.
   * மேலதிகப் பற்று வசதியைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
   * நேரடிப் பெறுவனவுகளைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

   மேற்கூறிய அநுகூலங்களுள் நடைமுறை வைப்பு (கேள்வி வைப்பு) கணக்கிற்கு மட்டும் கிடைக்கும் அனுகூலங்களின் எண்ணிக்கை.
   1) 2   2) 3   3) 4   4) 5   5) 6

12. காப்புறுதி செய்யக் கூடிய இடர் எனக் கூறக் கூடியது
   1) முகாமைத்துவத் தீர்மானத்தினால் ஏற்படும் நட்டம்
   2) வடிவமைப்பு மாற்றமடைவதால் ஏற்படும் நட்டம்.
   3) அறவிட முடியாக் கடன்.
   4) இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் இடர்
   5) விலை, கேள்வி என்பவை வீழ்ச்சியடைவதனால் ஏற்படும் இடர்.

13. களஞ்சியசாலை ஒன்றில் பொருட்களை இடத்திற்கு இடம் மாற்றுவதற்குப் பயன்படும் உபகரணங்களின் தொகுதியாகக் கொள்ளக்கூடியது
   1) பெலட்புளோர், தன்னியக்கக் களஞ்சிய முறை, போக்ட் லிப்ட், பெலட்ஜக்ஸ்
   2) பின்பக்கம் நகர்த்தும் இறாக்கை, பெலட்புளோர், போக்லிப்ட், பெலட்ஜகஸ்
   3) குவியலாக வைக்கும் களஞ்சியம், பெலட்புளோர், போர்க்லிப்ட்
   4) பெலட்றக், பெலட்ஜக்ஸ், பெலட்புளோர், போக்ட் லிப்ட்
   5) பே ாக்ட லிப்ட், பெலட்ஜக்ஸ், பண்டங்களை இடமாற்றும் நாடா, போக்ட் லிப்ட் ட்றக்

14. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் நிரல் I இலும் அவை ஒவ்வொன்றும் தொடர்பான விளக்கம் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன.

	நிரல் I		நிரல் II
A	விலைக்கூறு	1.	துறைமுகத்திற்கு கிடைக்கப்பெற்ற பொருட்கள் தொடர்பாக இறக்குமதியாளரினால் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணம்.
B	நாணயக் கடிதம்	2.	கப்பலேற்றிய பொருட்கள் குறித்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதென ஏற்றுக் கொள்ளப்பட்ட வணிகக் கழகத்தினால் வழங்கப்படும் ஆவணம்.
C	நட்டாஈட்டுக் கடிதம்	3.	ஏற்றுமதியாளரினால் இறக்குமதியாளரின் விலை விசாரணைக்குப் பதிலாக அனுப்பப்படும் ஆவணம்.
D	இறக்குமதிக்குறிப்பு	4.	குற்றமுடைய வார்நாமத்தை சுத்தமுடைய வார்நாமமாக மாற்றுவதற்கு கப்பலை கம்பனிக்கு வழங்கும் ஆவணமாகும்.
E	உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்.		இறக்குமதியாளர் சார்பாக அவரது வங்கியின் மூலம் ஏற்றுமதியாளருக்குரிய கொடுப்பனவை உறுதிப்படுத்தி வழங்கும் ஆவணம்.

மேலே நிரல் I க்கு ஏற்ப II யினை ஒழுங்குபடுத்தின் சரியானது

1) A - 2 B - 5 C - 3 D - 1 E - 4
2) A - 3 B - 5 C - 4 D - 1 E - 2
3) A - 5 B - 3 C - 2 D - 1 E - 4
4) A - 3 B - 2 C - 1 D - 5 E - 4
5) A - 3 B - 5 C - 4 D - 2 E - 1

15. இலத்திரனியல் சில்லறை வியாபாரம் (E - Tailing) எனக் கொள்ளக் கூடியது
1) நகரும் அல்லது இடம்பெயர் வர்த்தகம் (E.Commerce)
2) வணிகத்திலிருந்து வணிகத்திற்கு (Business & Business)
3) வணிகத்திலிருந்து அரசுக்கு (Business to Government)
4) வாடிக்கையாளரிலிருந்து வாடிக்ககையாளருக்கு (Costomer to Costomer)
5) வணிகத்திலிருந்து வாடிக்கையாளருக்கு (Business to Customer)

16 முதல் 20 வரையிலான வினாக்களுக்கும் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்புக.

16. அ) வணிகப்பரம்பலின் இரண்டாவது படிமுறையாக 1) ....யும்
2) .... நான்காவது படிமுறையாகவும் குறிப்பிட முடியும்.

ஆ) வணிகச் செயற்பாடுகளை உள்ளீட்டு - வெளியீட்டுச் செய்முறை ஒன்றாகப் பின்வரும் வரைபடம் மூலம் தரப்பட்டுள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

உள்ளீடு	வணிகக் கருமங்கள்	வெளியீடு
1) நிலம்	1) நிருவாகம்	
2) உழைப்பு	2) உற்பத்தி	
3) மூலதனம்	3) சந்தைப்படுத்தல்	பொருட்கள்
4) முயற்சி	4) நிதி	அல்லது
5)	5)	சேவைகள்
6)	6) ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்	
7) அறிவு	7)	

17. அ) திறமை, அனுபவம், சிறந்த மனப்பாங்கு என்பன 1) ....
களிடம் காணப்படும் பலங்களாகவும், பிழையான தீர்மானம் எடுத்தல் பின்னடைவு என்பவை
2) .... பலவீனமாகவும் கொள்ளப்படும்.

ஆ) நிலைபேறான அபிவிருத்தியினை உண்மை நிலைக்கு மாற்றுவதற்கு 1) ....
2) .... மாத்திரமன்றி மொத்த உலகப் பொருளாதார சமூகமும் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்க வேண்டும்.

18. அ) தனிநபர், நிறுவனங்களின் வருமானம் மீது விதிக்கப்படும் வரி 1) ....
எனவும் இது 2) .... வகையினைச் சார்ந்ததாகும்.

ஆ) நிலையான வசதி வீதமானது 1) ....

2) .... என வகைப்படுத்துகின்றது.

19. அ) கூட்டுறவுச் சங்க மொன்றில் அங்கத்துவம் பெறுவதற்கு 1) ....
ரூபாவினை பங்குப் பணபமாக செலுத்துவதுடன் ஆகக் குறைந்தது 2) ....
அங்கத்தவர்கள் சேருதல் வேண்டும்

ஆ) TABA சப்பத்து உற்பத்திக் கம்பனியும், SID சப்பாத்து உற்பத்திக் கம்பனியும் ஒன்றிணைந்து செயற்படும் வியாபார சேர்க்கை 1) .... சீனி உற்பத்திக் கம்பனியும் தளபாடம் உற்பத்தி செய்யும் கம்பனியும் ஒன்றிணைந்து செயற்படும் வியாபாரச் சேர்க்கையினை 2).. .... என அழைக்கலாம்.

20. வணிகமொன்றிலிருந்து முயற்சியாண்மையினை வேறுபடுத்திக் காட்டும் பிரதான அம்சங்களாக 1) .... 2) .... புத்துருவாக்கங்களை உருவாக்குதல் போன்றனவற்றையுக் குறிப்பிடலாம்.

21 முதல் 25 வரைவிலான வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.

21. அ) வணிகர் ஒருவரினால் மேற்கொள்ளக் கூடிய வணிக மோசடிகள் நான்கினைத் தருக.

1) ....

2) ....

3) ....

4) ....

ஆ) உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியினை தரம் உயர்ந்தவை என்பதனை உறுதிப்படுத்த பயன்படுத்தும் வழிமுறைகள் இரண்டு தருக.

1) ....

2) ....

22. பின்வரும் அட்டவணைணைப் பூரணப்படுத்துக.

தாபன அமைப்பு / பண்புகள்	பங்குடமை	வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி	உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி
1. அங்கத்தவர் எண்ணிக்கை			
2. நட்டப் பொறுப்பு			
3. சட்ட ஆளுமை			

23. அ) ஏனைய வங்கிகளிலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் இரண்டு தருக.

1) ....

2) ....

ஆ) காசோலைக்கு குறுக்கு கோடு இடுவதன் மூலம் வரைபவருக்கு கிடைக்கும் அனுகூலங்க் இரண்டு தருக.

1) ....

2) ....

24. அ) எழுத்து மூலமான தொடர்பாடல் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அநுகூலங்கள் இரண்டு தருக.

1) ....

2) ....

ஆ) போக்குவரத்தினதும், வழங்கல் சேவையினதும் முறைமைகள் இரண்டு தருக.

1) ....

2) ....

25. அ) சர்வதேச வர்த்தகத்திற்கு தடையாகவுள்ள பிரதான காரணிகள் இரண்டினையும் பெயரிடுக.

1) ....

2) ....

ஆ) சர்வதேச வியாபாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும்

1) வியாபாரச் சங்கம் (வியாபார வலயம்)

2) வியாபார ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு இவ்விரு உதாரணங்கள் தருக.

....

....

....

....

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:

❖ எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. (i) அ) "இலாபமீட்டும் நோக்குடன் செயற்படுபவை வணிகமாகும்" இக்கூற்றினை ஏற்பீரா? விளக்குக
ஆ) வணிகமொன்றின் பிரதான கருமங்களுள் "வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல்" என்பதும் ஒன்றாகும். விளக்குக.

(ii) வியாபாரமும் துணைச் சேவையுமின்றி வர்த்தகம் இல்லை" இக்கூற்றினைச் சுருக்கமாக விளக்குக

(iii) அ) வணிகமொன்றுக்கு வாய்ப்புக்கள், அச்சுறுத்துக்கள் போன்றவற்றினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பின்வரும் தரப்பினர் தொடர்பில் குறிப்பிடுக.
1) போட்டியாளர் 2) வழங்குனர்
ஆ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகமொன்று பெற்றுக் கொள்ளக் கூடிய அநுகூலங்கள் நான்கு தருக.

(iv) அ) தற்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு தருக.
ஆ) இலங்கைத் தர நிர்ணய நிறுவனம் வெளிநாட்டு வியாபாரம் தொடர் தர நியமனங்களை நடைமுறைப்படுத்தும் முறைகள் இரண்டினைத் தருக.
இ) உலக நுகர்வோர் தினத்தினைக் குறிப்பிடுக.

(v) அ) "நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி" என்பதைச் சுருக்கமாக விளக்கி இதன் எதிர்பார்ப்புக்களைத் தருக.
ஆ) வணிகங்களின் விருத்தி கருதி அரசினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் நான்கினைப் பெயரிடுக.? இவ்வசதிகளை அரசின் சார்பில் வழங்கும் நிறுவனங்கள் இரண்டு தருக.

02. (i) அ) வணிக செயற்பாடுகளில் அரசு தலையீடு செய்வதற்கான காரணங்கள் நான்கு தருக.
ஆ) அரசு வரி விதிப்பதன் நோக்கங்கள் நான்கு தருக.

(ii) அ) **வணிகங்களை வகைப்படுத்தலுக்கான அடிப்படை நியதிகள், வணிக அமைப்புக்களை** *(Business Organization)* வகைப்படுத்துவதற்கான அடிப்படைய நியதிகள் நான்கினை தனித்தனியாகத தருக.
ஆ) கம்பனியொன்றின் பங்குதாரருக்கும், அக்கறையுடையோருக்குமிடையிலான வெறுபாடுகள் நான்கு தருக.

(iii) நண்பர்கள் பலர் இணைந்து கம்பனியொன்றினை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளனர். அவர்களுக்கிடையில் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி என்பவற்றால் எதனை ஆரம்பிப்பது என்னும் தீர்மானத்துக்கு வர முடியாதுள்ளனர்.
நீர் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியை ஆரம்பித்தல் மிகப் பொருத்தமானது என்னும் ஆலோசனை வழங்குவீர்களாயின் உமது ஆலோசனையில் குறிப்பிட வேண்டிய இரு அனுகூலங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(*iv*) அ) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியின் முன்னுரிமைப் பங்கு சாதாரண பங்கு ஆகியவற்றில் முதலீடு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் பிரதி கூலங்கள் இவ்விரண்டு தருக.

ஆ) அரச கூட்டுதட்தாபனங்கள், அரச திணைக்களங்கள் போன்றன பொதுத்துறை அமைப்புக்களாக காணப்பட்டபோதிலும் இவை இரண்டிற்குமிடையில் வேறுபாடுகள் பலவுள்ளன அவ்வேறுபாடுகள் இரண்டு தருக.

(*v*) அ) 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் தாபிக்கக் கூடிய கம்பனி வகைகள் யாவை?

ஆ) கம்பனிப்பதிவாளருக்கு உள்ள அதிகாரங்கள் நான்கு தருக.

03. (*i*) அங்கீகார வணிகம் தொடர்பில் அங்கீகாரம் ஒப்பந்தமொன்றில் (Franchies Agreement) பொதுவாக உள்ளடக்கப்படும் விடயங்களைத் தருக.

(*ii*) அ) முயற்சியாண்மைப் பண்புகள், திறன்கள் என்பவற்றுக்கான எடுத்துக்காட்டுக்கள் நான்கு தருக.

ஆ) முயற்சியாளனுக்கும் அகமுயற்சியாளனுக்குமிடையிலான வேறுபாடுகள் நான்கு தருக.

(*iii*) சிறிய நடுத்தர அளவு வணிகஙங்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் முறைகளைக் குறிப்பிடுக.

(*iv*) அ) "காசோலையில் புறக்குறிப்பிடல் என்பது காசோலையில் பின்புறத்தில் காசோலையைப் பெறுவோன் தனது ஒப்பத்தை இடுவதாகும்" இக்கூற்றினை ஏற்பீரா? விளக்குக புறக்குறிப்பிடல் மூலம் நிறைவேற் றப்படுவது யாது?

அ) கடன் அட்டை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதன் மூலம் வாடிக்கையாளர், வங்கி பெற்றுக் கொள்ளும் அநுகூலங்கள் இவ்விரண்டு தருக.

(*v*) அ) இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் நிதி நிறுவனங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனக் குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் தருக.

ஆ) வதியாதோர் அந்நிய செலாவணிக் கணக்கினை வணிக வங்கியொன்றில் தாபித்துக்கொள்வதன் மூலம் கணக்கின் உடைமையாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.

04. (*i*) (அ) அலகுப் பொறுப்பாட்சி என்றால் என்ன? ஓர் ஊதாரணம் தருக.

(ஆ) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்திற்கும், நிதிக்கம்பனிகளுக்குமிடையில்லான அநுகூலங்கள் நான்கு தருக.

(*ii*) "தீயபாயக் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் கீழ் தீயினால் ஏற்படும் இழப்பு மாத்திரம் ஈடு செய்யப்படும் என்பதல்ல" இக்கூகூற்றினை விளக்குக.

(*iii*) போக்குவரத்து தொடர்பான அடிப்படைய (மூலக்) கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) பாதை (2) ஊடகம் (3) சக்தி (4) தரிப்பிடம்

மேற்கூறியவை தொடர்பில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தருக.

iv) தற்காலத்தில் இலத்திரனியல் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவதால் பெற்றுக்கொள்ளக்கூடிய அநுகூலங்கள் யாவை?

v) அ) களஞ்சியப்படுத்தல் (Ware housing), களஞ்சியம (ware house) ஆகியவற்றுகிடையிலான வேறுபாட்டினைச் சுருக்கமாக விளக்குக.

ஆ) களஞ்சியப்படுத்தல் செய்முறையில் உள்ளடக்கப்படும் கருமங்களைத் தருக.

05. *(i)* 2019 ஆகஸ்ட் 20ம் திகதி சகல பிரிவிலுமுள்ள ஊழியர்களுக்கு நான்கு நாள் வதிவிடப் பயிற்சி வகுப்பொன்று நடைபெறவுள்ளதாக நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரினால் கடிதம், குறுஞ்செய்தி மூலம் பிரிவு முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இச்செய்தி கிடைக்கப்பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தி பிரிவு முகாமையாளர்கள் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு மின் அஞ்சல் மூலம் அறிவித்துள்ளனர். மேற்கூறிய தகவல்களிலிருந்து தொடர்பாடல் செய்முறையின் அடிப்படைகளைக் குறிப்பிட்டு இவை ஒவ்வொன்றுக்கும் இவற்றிலிருந்து உதாரணம் தருக.

(ii) தன்யுடைமை வணிகர் தமது வணித்தினை பங்குடமை வணிகமாக மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளார். தனியுடமை வணிகத்துடன் ஒப்பிடுமிடத்து பங்குடமை வணிகத்தில் காணப்படும் அநுகூலங்களைத் தருக. பங்குடமையாக மாற்றும் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் நான்கு தருக.

(iii) இலங்கையின் அண்மைக்காலமாக முறைசார் தொடர்பாடலிலும், முறைசாராத் தொடர்பாடல் கூடிய செல்வாக்கினைப் பெற்று வருகின்றது.

அ) முறைசார் தொடர்பாடல் முறைசாராத் தொடர்பாடல் என்பதனைச் சுருக்கமாக விளக்கி உதாரணம் தருக.

ஆ) முறைசாராத் தொடர்பாபடலில் காணப்படும் அநுகூலங்கள் நான்கு தருக.

iv) அ) காவியின் காசோலை, கட்டளைக் காசோலை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

ஆ) முதனிலை வணிகர்களின் பிரதான கருமங்கள் இரண்டினைத் தருக.

v) உற்பத்தியாளர் தமது பொருட்களைப் பங்கீடு செய்வதற்கு ஏன் இடைநடுவர்களைப் பயன்படுத்துகின்றனர். என்பதற்கான காணங்களைத் தருக.

06. *i)* உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் இரண்டினைப் பெயரிட்டு அவற்றின் தொழிற்பாடுகள் இவ்விரண்டு தருக.

ii) அ) கட்டுண்ட கடைக்கும் (Tide shop) அங்கீகார வணிகத்திற்குமிடையிலான வேற்றுமை இவ்விரண்டு தருக.

ஆ) சில்லறை வியாபாரத்தையும், மொத்த வியாபாரத்தையும் வேறுபடுத்திக்காட்டும் அம்சங்கள் நான்கு தருக.

iii) அ) இலங்கையின் ஏற்றுமதிக்கட்டமைப்பு, இறக்குமதிக்கட்டமைப்பு என்பவற்றைத் தருக.

ஆ) இரு தரப்பு வியாபார ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் அநுகூலங்கள் இரண்டு தருக.

(iv) அ) சர்வதேச வியாபாரத்திற்கான அடிப்படைகள் யாவை?

ஆ) மீள் ஏற்றுமதிக்கும், இறக்குமிட வியாபாரத்திற்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

v) அ) வெளிநாட்டு வியாபாரத்தின் நவீன போக்குகள் இரண்டு தருக.

ஆ) இலத்திரனியல் வணிகத்தின் மூலம் வாடிக்கையாளர் பெறும் அனுகூலங்கள் நான்கு தருக.

வணிகக் கல்வி I விடையும் புள்ளித்திட்டமும்

Grade 12

1) 4 2) 2 3) 5 4) 3 5) 2 6) 2 7) 1 8) 4 9) 2
10) 4 11) 3 12) 3 13) 5 14) 2 15) 5

16. அ) 1. பணப்பயன்பாடு 2) தகவல் யுகம்
ஆ) தகவல், காலம் மனித வளக் கருமம், தகவல் முகாமைத்துவம்

17. அ) 1. ஊழியர்கள் 2) முகாமையாளர் ஆ வணிகம், நுகர்வோர்

18. அ) 1. வருமான வரி 2) நேர்வரி
ஆ) நிலையான வைப்பு சதவீதம் நிலையான கடன் வசதி வீதம்

19. அ) 1. 100/= 2. 10 பேர்
ஆ) 1. கிடையான சேர்க்கை/இணைவு 2. முரண்பாடான சேர்க்கை / இணைவு

20. 1) வணிக சந்தர்ப்பங்களை இனங்காணல் 2. இடர்களை முகாமை செய்தல்

21. அ) 1. கலப்படம் 2. மிகுதிப்பண மோசடி 3. அளவை நிறுவைகளில் மோசடி
4. சுட்டும் துண்டின் விலை, பாவனை முடிவுத் திகதி போன்றவற்றில் மாற்றம் செய்தல்.
5. தரம் குறைந்த பொருட்களை லேபலிடல், பொதியிடல் போன்ற நடவடிக்கையினை மேற்கொள்ளல்.
ஆ) உத்தரவாதச் சான்றிதழ் வழங்குதல் SLS குறியீட்டுடன் பொருட்களை விற்றல்
தேவையான தகவல்களைப் பொதியிடல், சுட்டும் துண்டில் இடல்
ISO சான்றுடன் பொருட்களை விற்றல்.

22.

	பங்குடமை	தனியார் கம்பனி	வரை. கம்பனி
அங்கத்தவர் எண்ணிக்கை	2-20	1-50	2- முடிவிலி
நட்டம் பொறுப்பு	வரையறை இல்லை	பங்குகளால் வரை யறுக்கப்பட்டது	உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டது
சட்ட ஆளுமை	இல்லை	உண்டு	உண்டு

23. அ) 1. நடைமுறை (கேள்வி) வைப்பினை ஏற்றுக்கொள்ளல்
2. அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்
ஆ) காசோலைக்குப் பணம் பெற்றவரை இலகுவில் அறியலாம்
கொடுப்பனவுத் தடைக் கட்டளை பிறப்பிக்க கூடிய கால அவகாசம் கிடைத்தல்.
குறுக்குக் கோட்டிலும் விசேட பதங்களை இடலாம்
காசோலை மோசடி முறையில் கைமாற்றம் செய்யப்படுவதனைத் தடுக்கலாம்.

24. அ) கூடிய விளக்கத்துடன் தகவல்களை முன்வைக்கலாம்.
தகவல் வழங்கப்பட்டமைக்கு, பெறப்பட்டமைக்கும் சான்றாக அமையும்
வரைபுகள், அட்டவணைகள், படங்கள், தரவுகள், குறிப்புக்கள் போன்றவற்றை இணைத்துக் கொள்ளலாம்.
ஆ) சம நிறைகொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை
உற்பத்தி செய்முறை வரைபாய்தல் சிக்கல் கொண்ட முறைமை
உற்பத்தியின் பின்னர் இறுதி நுகர்வோரின் கைக்குக் கிடைக்கச் செய்யும் சிக்கல் நிறைந்த முறைமை
உற்பத்திப் பொருள் வினியோகித்த பின்னர் மீள்பாய்ச்சலுடன் கூடிய முறைமை (ஏதாவது இரண்டு)

25. அ) தீர்வைத் தடைகள் தீர்வையல்லாத் தடைகள்
ஆ) வியாபாரச் சங்கம் 1) ஆசியான் 2) ஐரோப்பிய சங்கம் 3) குழு - 8
வியாபார ஒப்பந்தம் 1) SAFTA 2) SAFTA 3) APTA 4) ISFTA 5) PSLFTA

வணிகக் கல்வி II

1) (1) அ) இல்லை, வணிகம் என்பது மனித தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்யும் நோக்கில் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல், வினியோகித்தல் மூலம் இலாபமீட்டும் எநதவொரு செயற்பாடும் வணிகமாகும். ஆனால் இலாபமீட்டும் நோக்குடன் செயற்படுவது மட்டும் வணிகமல்ல. ஏனெனில் வணிகமென்பது சமூக நலனை மேம்படுத்தும் நோக்கிலும் செயற்படுகின்றன. (உ-ம்) பாடசாலை, வைத்தியாசாலை, சமூக சேவை நிறுவனங்கள்.

எனவே வணிகம் என்பது இலாபமீட்டும் நோக்குடன் அல்லது இலாப நோக்கின்றி மனித தேவை விருப்பங் களை பூர்த்தி செய்வதில் செயற்படும் எந்தவொரு பொருளாதரச் செயற்பாட்டினையும் குறிக்கும்

ஆ) பொருளொன்றை அல்லது சேவையொன்றை உற்பத்தி செய்யும்பொழுது பயன்படுத்தப்படுகின்ற வளங்களின் தன்மையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற பெறுமதி அதிகரிப்பு வளங்களுக்கு பெறுமதி அதிகரித்தல் எனப்படும்.

(2) வர்த்தகம் என்பது உற்பத்தியாளனிடமிருந்து பொருட்கள் சேவைகள் நுகர்வோர் கைக்கு கிடைக்கும் வகையில் இடம் பெறும் வியாபாரமும் துணைநிலைச் சேவைகளையும் உள்ளடக்கியதாகும்.

வியாபாரம் என்பது பொருட்கள் சேவைகளை கொள்வனவு, விற்பனை செய்யும் செயற்பாடாகும் இது ஒரு தரப்பினரிடமிருந்து இன்னொரு தரப்பினருக்கு பொருளின் உரிமை பணப் பெறுமதியொன்றின் கீழ் பரிமாற்றப் படுவதாகும்.

துணைச்சேவை என்பது வியாபாரச் செயற்பாட்டினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உதவி புரியும் பணம், வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றைக் குறிக்கும்.

எனவே, வியாபாரம் மட்டுமிருந்து துணைச் சேவைகள் இல்லையாயின் அது வர்த்தகமாகாது எனவே வியாபாரமும், துணை நிலைச்சேவைகளும் உள்ளடக்கிய செயற்பாடே வர்த்தகமாகும்.

(3) அ) போட்டியாளர்

1) போட்டியாளர்களின் எண்ணிக்கை 2) போட்டியாளர்களது மேம்படுத்தல் உபாயங்கள்
3) புதிதாக சந்தைக்குள் நுழையும் போட்டியாளர்களின் எண்ணிக்கை/வருகை
4) சந்தையை விட்டு விலகும்/நீங்கும் போட்டியாளர்களின் எண்ணிக்கை
5) போட்டியாளர்களினால் அவர்களது பொருட்கள்சேவைகளுக்கு வழங்கப்படும் வசதிகள்
6) போட்டியாளர்களது நன்மதிப்பு/விம்பம்

வழங்குனர்கள்

1) வழங்குனர்களின் எண்ணிக்கை, 2) வழங்குனர்களின் நிபந்தனைகள் - கழிவுக்கடன் வசதி
3) முதன்மைக்காலம் (உரிய நேரத்திற்கு வழங்குதல்)
4) வழங்கும் பொருட்கள் சேவைகளின் தரம்

ஆ) - வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படல் - வணிகத்தின் நன்மதிப்பு விருத்தியடைதல்
- வணிகம் தொடர்பான நம்பகத் தன்மை உறுதி செய்யப்படல்
- வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல்
- வணிகத்தின் இலக்கு நோக்கம் என்பவற்றை நிறைவேற்றுவது இலகுவாகுதல்.

(4) அ) - சந்தை விரிவாக்கம் - அதிகரித்த போட்டி - கட்டுப்பாடற்ற வியாபாரம்/சந்தை
- பூகோளமயமாக்கல் - வியாபார மோசடிகள் அதிகரித்துள்ளமை

ஆ) - இறக்குமதி பரிசோதனைத்திட்டம் - ஏற்றுமதி பொருட்கள் பரிசோதனைத் திட்டம்
- ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படும் கடலுணவுப் பொருட்கள் பரிசோதனைத் திட்டம்

இ) மார்ச்சு 15ம் திகதி

(5) அ) - வளப்பயன்பாட்டினைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் மனித நலனை மேம் படுத்துவதாகும்.
- உலகிலுள்ள அனைத்து மக்களினதும் வறுமையைப் போக்குதல்
- உயர் வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் நிகழ்கால, எதிர்காலப் பரம்பரையினது தேகாரோக் கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபட்டு செல்வத்தை ஈட்டி சிறந்த வாழ்க்கைத் தரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களைப் பலப்படுத்தல்.
- போட்டிச் சந்தையில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைக்கு சூழல் நேயம் கொண்ட உற்பத்திகளைக உருவாக்குதல்.

ஆ) - கட்டடங்களை நிர்மாணித்துக்கொடுத்தல் - வீதி அமைப்பும் போக்குவரத்து வசதிகளும்
- கழிவகற்றல் வசதிகள் - இட ஒழுங்கமைத்தல்
- வலுச் சக்தி வசதிகள்
- இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
- இலங்கை முதலீட்டுச் சபை
- வீதி அபிவிருத்தி அதிகார சபை

2. (1) அ) நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு
- தனியுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கு - நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு
- சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கு
- உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு
- பொதுப்பண்டங்கள் சேவைகளை வழங்குவதற்கு
- வணிகங்களுக்கு தேவையான பல்வேறுபட்ட உதவிகள், ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு

ஆ) - அரசின் சமூகச் செலவு, ஏனைய செலவுகளுக்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கு
- உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கு - வருமான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதற்கு
- சமூகவிரோத நடவடிக்கைகளை (மது அருந்துதல், புகை பிடித்தல்? சூதாட்டம்) போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவோரை ஊக்கமிழக்கச் செய்வதற்கு

(2) அ)

வணிகங்களை வகைப்படுத்தலுக்கான அடிப்படை நியதிகள்	வணிக அமைப்புக்களை வகைப்படுத்தலுக்கான அடிப்படைய நியதிகள்
1) உற்பத்தியின் தன்மை	1) நோக்கம்
2) உற்பத்தித் துறை	2) உரிமை
3) உரிமை	3) பொறுப்பு
4) நோக்கம்	4) வாழ் தன்மை/நிலைத்திருத்தல்
5) பருமன்	5) சட்ட ஆளுமை

ஆ)

பங்குதாரர்	அக்கரையுடையோர்
1. கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடுபடுத்தியுள்ளோர்.	- நிறுவனமொன்றின் மீது அக்கறையுள்ள பல்வேறு தரப்பினராகும்
2. இவர்களது நோக்கம் முதலீட்டின் மூலம் பங்கிலாபம் மூலதன இலாபத்தை உழைப்பதற்கும்	- இவர்கள் ஒவ்வொருவரதும் நோக்கங்கள் வேறுபட்டவை ஆகும்.
3) பங்குதாரரும் அக்கறையுள்ளோரில் ஒரு வகுதியினராகும்	- அகக்றையுள்ளோர் அனைவரும் பங்குதார்கள் இல்லை
4) கம்பனியின் செயற்பாடுகளை நேரடியாக ஈடுபாடு கொள்ள முடியும் (கூட்டங்களில் கலந்து கொள்ளல், இயக்குனரைத் தெரிதல் தீர்மானம் எடுத்தல்)	- நேரடியாக ஈடுபடவில்லை.
5) பங்குதாரர் முன்னுருமைப்பங்குதாரர் சாதாரண பங்குதாரர் என வகைப்படுத்தல்ாம்.	- அக்கறையுடையோரை அகரீதியில், புறரீதியில் அக்கறையுடையோர் என வகைப்படுத்தலாம்.

(3) 1) பொதுக் கம்பனியைத் தாபிப்பதாயின் பங்குகள், தொகுதிக்கடன் பத்திரங்கள் போன்றவற்றை வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விட முடிவதால் பெருமளவு மூலதனத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். மட்டுமன்றி விலை கூறலை (பட்டியல்படுத்தல்) பெற்றுக்கொள்வதன் மூலம் பங்குச் சந்தையில் இவற்றைக் கைமாற்றமும் செய்யலாம். இதன் மூலம் கூடிய பிரதிபலன்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

2) பொதுக்கம்பனியின் பங்குதாரர் உச்ச எண்ணிக்கை வரையில்லை என்பதால் அதிகளவு பங்குதார்களை இணைத்துக் கொள்வதன் மூலம் பெருமளவு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடியும். பெருமளவு பங்குதாரரிலிருந்து மிகவும் பொருதத்மான இயக்குனர் சபையினையும் தெரிவு செய்ய முடியும்.

(4) அ) சாதாரண பங்கு

அநுகூலம் : 1) கம்பனியின் உரிமையாளராகுதல் 2) வாக்களிக்கும் உரிமை கிடைக்கும் 3) முகாமையில் (இயக்குனராக) பங்கு கொள்ள முடியும் 4) இலாபம் அதிகரிக்கும் போது கூடிய பங்கிலாபம் பெறலாம். 5) கம்பனியின் ஒதுக்குகளிலும் உரிமை பெற முடியும் (உபகரணங்கள்) 6) உரித்து வழங்களையும் பெறலாம்.

பிரதி கூலம் : 1) பங்கிலாபம் பெறுதல் நிச்சயமற்றது 2) பங்கிலாபம், மூலதனம் ஆகியவற்றை இறுதியிலேயே பெறமுடியும் 3) முதலீடு தொடர்பான இடர்/அச்சம் அதிகம்

முன்னுருமைப் பங்கு

அநுகூலம்

1) குறித்த சதவீதத்தால் பங்கிலாபம் நிச்சயமாகப் பெற முடியும்
2) இலாபம் உழைக்காத காலப் பகுதிக்குரிய பங்கிலாபத்தினை ஏனைய வருடங்களில் பெறலாம்.
3) பங்கிலாபம் பங்கு மூலதனம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதில் முன்னுருமை
4) ஒப்பீட்டு ரீதியில் இடர் குறைவு

பிரதிகூலம்

1) கம்பனியில் உரிமையில்லை
2) குறித்த சதவீதத்தில் மட்டுமே பங்கிலாபம் கிடைக்கும்
3) வாக்களிக்கும் உரிமையில்லை
4) முகாமையிலும் பங்குகொள்ள முடியாது
5) கடன் கொடுனராகவே கருதப்படுவதால் இடைக்காலத்தில் பணத்தை செலுத்தி மீட்பு செய்யலாம்

ஆ)

	அரச கூட்டுத்தாபனம்		அரச திணைக்களம்
1)	பாராளுமன்ற பொது விசேட சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.	-	அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் தாபிக்கப்படும்.
2)	அரசின் கொடை, கடன், நிதியம் என்பவை மூலம் மூலதனம் வழங்கப்படும்.	-	வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மூலதனம் இடப்படும்.
3)	ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரித்துடையவர்கள்.	-	ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர்கள்
4)	சட்ட ஆளுமை உண்டு	-	சட்ட ஆளுமை இல்லை
5)	கணக்காய்வாளர் நாயகம், பொதுத்துறைக்கான பாராளுமன்றக்குழு, பொதுக் கணக்கு குழு என்பன கட்டுப்படுத்தும்.	-	கணக்காய்வாளர் நாயகத்தினால் கட்டுப்படுத்தப்படும்

5) அ) 1. வரையறுக்கப்பட்ட கம்பனி 2) வரையறுக்கப்படாத கம்பனி
3) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி

ஆ) - கம்பனிகளைப் பதிவு செய்தல்
- கம்பனியின் தகவல்களை அறிந்து கொள்வதற்குகணக்குப் புத்தகத்தகங்கள், ஆவணங்கள்? இடாப்புக்கள் போன்றவற்றைப் பரிசீலனை செய்தல்.
- கம்பனிச் சட்டதிட்டங்களுக்கு மாறாக செயற்படும் கம்பனிகளின் பெயரை இடாப்பிலிருந்து நீக்குதல்.
- கம்பனிகளின் தொழிற்பாட்டினை மேற்பார்வையும், பரிசீலனையும் செய்தல்.

3. 1) - அங்காரம் வழங்குபவரின்வணிகப் பெயர், வியாபாரக்குறி, இலட்சிணை போன்றவற்றைப் பயன்படுத்தல் தொடர்பான நிபந்தனைகள்.
- வணிகத்தினை நடாத்திச் செல்வதற்கான சட்டதிட்டங்கள்
- அங்கீகாரம் வழங்கப்படுபவனால் வழங்கப்படும் சேவைகள்
- நிதி தொடர்பான நிபந்தனைகள்
- அங்கீகாரம் பெறுபவவர் செலுத்த வேண்டிய தொடக்க கட்டணம்
- மாதாந்த இறைக்கட்டணம்

2) அ)

பண்பகள்	**திறன்கள்**
- இடர் ஏற்பதற்கான விருப்பம்	- தலைமைத்துவத் திறன்
- புத்துருவாக்கம்	- ஆளிடைத்தொடர்புத் திறன்
- அர்ப்பணிப்பு	- தொடர்பாடல திறன்
- தன்னம்பிக்கை	- அடிப்படை முகாமைத்துவத் திறன்

ஆ)

முயற்சியாளன்	**அகமுயற்சியாளன்**
- நிறுவன உடைமையாளன்	- நிறுவன உயர்மட்டப் பதவிகளில்கருமமாற்றுகின்ற ஆக்க ரீதியான நபர்கள்.
- முயற்சியினைத் தோற்றுவிப்பவர்	- முயற்சியினுள் புதிய உற்பத்தியினை/முறைமையினை மாற்றியமைப்பவர்.
- புத்தாக்கம் புரிபவர்	- அதனை மேம்படுத்துபவர்
- இலாபத்தினை அனுபவிப்பவர்	- சம்பளம், மேன்நலன், பதவி உயர்வு போன்றவற்றை அனுபவிப்பவர்.

- நிச்சயமற்ற நிலைமை, சூழல் மாற்றம் போன்றவற்றால் ஏற்படும் ஆபத்து, இடர் போன்றவற்றை ஏற்பர். - அவ்வாறு ஏற்பதில்லை
- தகைமைகள் எதுவும் அவசியமில்லை. - தொழில் தகைமை, கல்வித் தகைமை, தொழில் நுட்பத் தகைமைகள் அவசியம்.

3) - தேசிய உற்பத்தி வளர்ச்சிக்குப் பங்களித்தல். - வேலை வாய்ப்புக்களில் பங்களித்தல்.
- உள்நாட்டு வளப் பயன்பாடு
- பிரதேச ரீதியான அபிவிருத்தி மூலம் நகரமயமாக்கல் தொடர்பான பிரச்சினைகளை இழிபுபடுத்தல்.
- வருமானப் பங்கீட்டிலுள்ள சமமின்மையைக் குறைத்தல்.
- பாரிய வணிகங்கள் ஈடுபடாத உற்பத்திகளை மேற்கொள்ளல்.
- பாரிய வணிகங்களுக்குத் தேவையான மூலப் பொருள், முடிவுப்பொருட்களை வழங்கல் செய்தல்.
-

4) அ) - ஏற்றுக்கொள்ள முடியாது. காசோலையில் குறிப்பிடல் என்பது காசோலையின் முகப்பில் குறிப்பிட்டவாறு தனது பெயரைக் காசோலையின் பின்புறத்தில் எழுதுவதாகும்./காசோலையைப் பெறும் எவரும் சாட்டுதல் செய்யும்போது அவரின் பெயரை எழுதுவதாகும்.
- காசோலை சட்ட ரீதியாக சாட்டப்பட்டது என்பது புறக் குறிப்பிடல் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆ) - கடன் அட்டை மூலம் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள்
1) கணக்கு திறக்க வேணடியதில்லை 2) குறிப்பிட்ட கால வரையறை வரை வட்டியில்லாத கடனைப் பெறலாம். 3) அனுமதிக்கப்பட்ட தெகையினை ATM மூலம் பெறலாம்
4) கழிவு, போனஸ் புள்ளி பெறலாம்

- வணிகருக்கு கிடைக்கும் அனுகூலம்
1) பணம் கிடைப்பது உறுதி (அ.மு.க. ஏற்படுவதில்லை) 2) புரள்வும், இலாபமும் அதிகரிக்கும்.
3) இலவச விளம்பரம் கிடைத்தல்.

5) அ) - வங்கித்துறை நிறுவனங்கள் (உ-ம்) இலங.கை மத்திய வங்கி, உத்தரவுப் பத்திரம் பெற்ற வணிக வங்கி, உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கி
- வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் ஏனைய நிதி நிறுவனங்கள் (உ-ம்) அனுமதிப் பத்திரம் பெற்ற நிதிக்கம்பனி, கூட்டுறவுக் கிராமிய வங்கி, சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்(சணச)
- விசேட நிதி நிறுவனம் (உ-ம்) விசேட குத்தகை நிதிக்கம்பனி, முதனிலை வணிகர்கள்.
- சேமிப்பு ஒப்பந்த நிறுவனங்கள் (உ-ம்) காப்புறுதிக் கம்பனி, ஊழியர் சேமலாப நிதியம் ஊழிய நம்பிக்கை நிதியம்

ஆ) - அந்நியச் செலாவணி வடிவில் வட்டி வருமானம் பெறலாம்
- வட்டி வருமானத்திற்கு விரிவிலக்கு
- கணக்கின் நிலுவைக்கு ஏற்ப அந்நியச் செலாவணியில் கடன் பெறலாம்.
- வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.
- நாணய மாற்று விகிதம் அதிகரிக்கும் போது அதன் அனுகூலத்தைப் பெறலாம்.

4. 1) அ) முதலீட்டாளர்களுக்கு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் திரட்டப்படும் பணத்தினை உள்ளடக்கிய முதலீட்டு நிதியமே அலகுப் பொறுப்பாட்சியாகும்.
(உ-ம்) Namal Unit Trust, Pyramid Unit Trust, Ceybank Unit Trust

ஆ) **அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம்**	**நிதிக்கம்பனி**
1) பிணைங்கள் பரமாற்று ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி பெறல்	மத்திய வங்கியின் நாணயச் சபையிடமிருந்து அனுமதி பெறல்
2) அலகுடமையாளர், முகாமையாளர் நம்பிக்கை யாளர் என மூன்று தரப்பினர் உண்டு	உடமையாளர், வைப்பாளர், மட்டும் உண்டு
3) முதலீட்டின் மூலம் பங்கிலாபம், வடடி, திரும்பல் போன்ற பல வருமான வழிகள் உண்டு	வட்டி வருமானம் மட்டும் உண்டு
4) பொதுக்கம்பனியாக இருக்க வேண்டியதில்லை	வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக மட்டும் இருத்தல் வேண்டும்.
5) பிரதான தொழில் முதலீடு செய்தலாகும்	வாடகைக் கொள்வனவுக் கடன் வழங்குதலாகும்.

2) தீயபாயக் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் கீழ் தீயினால் ஏற்படும் இழப்பே ஈடு செய்யப்படும். எனினும் மேலதிக கட்டணமொன்றினைச் செலுத்துவதன் மூலம் தீயபாயத்திற்கு மேலதிகமாக வேலை நிறுத்தம், வெடிப்புக்களால் ஏற்படும் நட்டம், மின் ஒழுக்கினால் ஏற்படும் நட்டம், பூகம்பம், வெள்ளப் பெருக்கு, ஆகாய விமான விபத்து போராட்டங்களினால் ஏற்படும் இழப்பு போன்றனவும் ஈடு செய்யப்படுவதனால் தீயபாயம் நட்டம் மாத்தரமன்று மேற்கூறிய இழப்புக்களுக்கும் நட்டவீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

3) 1) பாதை (வழி)
   1) அதிவேகப்பாதை
   2) மேம்பாலம்
   3) சுரங்க வழிப்பாதை
   4) இரட்டை புகையிரதப் பாதை
   5) புகையிரதப் பாதை விரிவாக்கம்
   6) பாதை நவீன மயப்படுத்தல்
   7) புதிய சிகிச்சை முறைகள்
   8) கால்வாய் போக்குவரத்து நவீனமயப்படுத்தல்.

2) ஊடகம்
   1) சக்தி கூடிய புகையிரதம் அறிமுகம்
   2) நவீன, சொகுசு வாகனம் அறிமுகம்
   3) பண்டங்களின் தன்மைக்கு ஏற்ப நவீன தொழில் நுட்ப வாகனம்
   4) விமான பஸ் (Air Bus)
   5) கடலில் நிறுத்தும் விமானம்

3) சக்தி
   1) சூரிய சக்தி, பெற்றரி ஆகிய இருமுறைர் பாவனை.   2) வாயு சக்திப் பாவனை
   3) Hybrid தொழில் நுட்பம்   4) நவீன கனிய எண்ணெய் வாயு கண்டு பிடிப்பு

4) தரிப்பிடம்
   1) நவீன தொழிநுட்ப வசதிகொண்ட துறைமுகம் நிர்மானித்தல்.
   2) நவீன வசதியும், நுட்பமும் கொண்ட விமான நிலையம் நிர்மானம்
   3) நவீன வசதிகளுடனான தரிப்பிடங்கள் அறிமுகம் - (அதி வேகப் பாதையில்)
   4) நவீன வசதியுடனான புகையிரத நிலையம்
   5) நவீன வசதிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையம் புனருத்தாபனம்.

4) 1) கிரயம் குறைவு   2) விரைவு   3) கால விரயம் இன்மை   4) பாதுகாப்பு
   5) பரவலாகப் பயன்படுத்த முடியாமை   6) ஒரு செய்தியை பலருக்கும் அனுப்பலாம்.

5) அ) கனஞ்சியப்படுத்தல் என்பது பொருட் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது உற்பத்தி செய்த சந்தர்ப்பத்திலிருந்து அவற்றைச் சந்தைப்படுத்தும் வரையில் அல்லது நுகர்வுக்கு எடுக்கும் வரையில் அல்லது வினியோகிக்கும் வரையில் பாதுகாப்பாக வைத்திருக்கும் அல்லது நீண்ட காலம் வைத்திருக்கும் செய்முறையாகும்.
   களஞ்சியம் என்பது இருப்புக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அல்லது நீண்ட காலம் வைத்திருப்பதற்கு பயன்படுத்தும் இடமாகும்

ஆ) - இருப்புக்களைப் பெற்றுக் கொள்ளல்
   - அடையாளம் காணல்
   - பரீட்சித்தல்.
   - சரியானதென உறுதிப்படுத்தல்
   - தர உறுதிப்பாடு
   - அகற்றுதல்
   - வழங்கலுக்காக மீள் பெறல்

5. 1)

செய்தி அனுப்புபவர்	-	நிறைவேற்றுப் பணிப்பாளர்
செய்தி	-	2019 ஆகஸ்ட் 20ம் திகதி நடைபெறவுள்ள பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வதற்கான அழைப்பு
பெறுபவர்	-	பிரிவு முகாமையாளர்கள்
துலங்கல்	-	செய்தி கிடைத்தமை தொடர்பில்எடுக்கப்பட்ட நடவடிக்கை
மீள வலியுறுத்தல்	-	பிரிவு முகாமையாளர்கள் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமையை நிறைவேற்றுப்ப பணிப்பாளருக்கு தெரியப்படுத்தல்.

2) அநுகூலம்
   1. பங்குடமையில் 2 - 20 பங்காளர்கள் இணைவதற்கு வாய்ப்பு காணப்படுவதால் அதிகளவு மூலதனம் திரட்டலாம்
   2) நட்டம் ஏற்படும் போது பலரிடையே பகிர்ந்து கொள்ளலாம்
   3) பலரும் இணைந்து தீர்மானம் எடுப்பதால் சிறந்த தீர்மானம் எடுக்கலாம்.

4) விசேட திறமையுள்ளவர்கள் இணைந்து கொள்வதால் வணிகத்தினை மிகவும் சிறப்பாக நடாத்திச் செல்லலாம்.
5) ஒன்றிணைந்த பொறுப்புக் காரணமாக ஊக்கமும், வினைத்திறனும் கூடியளவில் காணப்படும்.

முகங்கொடுக்கும் பிரச்சினை
1) பொறுப்பு வரையறை அற்றதாகக் காணப்படுவதால் சகலரும் மேலதிகமாக நட்டத்தினை தாங்க வேண்டும்
2) பங்காளரிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு
3) ஒரு பங்காளியின் செற்பாட்டிற்கு அனைத்துப் பங்காளியும் பொறுப்புக் கூற வேண்டும்.
4) இலாபம் பலரிடையே பகிர்ந்து கொள்ள வேண்டியிருத்தல்.
5) நீடித்த வாழ்வு அற்றது 6) தனியுடமையுடன் ஒப்பிடுமிடத்து சட்டக்கட்டுப்பாடுகள் அதிகம்.

3) முறைசார் தொடர்பாடல் என்பது அமைப்பின் சட்டவிதிகளுக்கு ஏற்ப இடம்பெறும் தொடர்பாடலாகும். இத்தொடர்பாடலானது அமைப்பின் அதிகாரமுள்ளவர்களினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் (உ-ம்) கூட்டம், அறிக்கைகள், சுற்றறிக்கை, கடிதம்.
முறைசாராத் தொடர்பாடல் என்பது அமைப்பொன்றில் உருவாகும் முறைசாராக் குழுக்களுக்கிடையில் உத்தி யோகபூர்வமற்ற முறையில் இடமபெறும் தொடர்பாடலாகும். (உ-ம்) அநாமதேயக் கடிதம், கட்டுக் கதைகள் அநாமதேய தொலைபேசி உரையாடல்
அநுகூலம்:
1) மிகவும் விரைவானது, 2) கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தப்படும்.
3) தனிப்பட்டவர்களது தேவை, நோக்கம் என்பவற்றைற மிகவும் இலகுவாக அடையலாம்
4) இதற்கான முக்கியத்துவம் அதிகம்.

4) அ)

காவியின் காசோலை	கட்டளைக் காசோலை
1) காசோலையில் அல்லது கொண்டு வருப வருக்கு (or bearer) என்ற சொல் வெட் டப்படாத காசோலையாகும்.	அல்லது கொண்டு வருபவருக்கு என்ற சொல் வெட்டப் பட்டு பதிலாகக் கட்டளைக்கு என்ற சொல் எழுதப்பட் டிருக்கும் காசோலை.
2) பாதுகாப்புக் குறைந்தது	பாதுகாப்புக் கூடியது.

ஆ) - அரச பொதுப்படுகடன் திணைக்களத்தினால் நடாத்தப்படும் முதனிலை ஏல விற்பனையில் பங்குபற்றல்
- திறைசேரி முறி தோடர்பாக இரண்டாந்தர சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்தல்.

5) - உற்பத்தித் தாழில்பாட்டினையும், வினியோகத் தொழிற்பாட்டினையும் மேற்கொள்ளும்போது தோன்றும் பிரச்சினை களைத தவிர்ப்பதற்கு
- உற்பத்தியாளன் வினியோகத் தொழிற்பாட்டில் ஈடுபட வெண்டுமாயின் அதிகளவு டுலதனத்தை முடக்க வேண்டியுள்ளது. அத்துடன் கால விரயமும் ஏற்படும். இவற்றைத் தவிர்ப்பதற்கு
- உற்பத்தியாளர் வினியோகக் கருமங்களில் ஈடுபடும் நேரத்தினை உற்பத்திக் கருமங்களில் திறம்பட ஈடுபட முடியும்.
- நாடு முழுவதும் வினியோகக் கருமங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இரண்டு கருமங்களையும் திறனாக மேற்கொள்ள முடியாது என்பதனால்
- வினியோகக் கருமங்களில் ஈடுபடுவதற்கு களஞ்சியப் போக்குவரத்து சாதனம், மேம்படுத்தல் போன்றவை தேவைப்படுவதால் முகவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் இதன் மீதான செலவீனங்களைத் தவிர்ப்பதற்கு

6. 1) பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை.
- நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- தனியுரிமை உருவாகுவதைத் தடுத்தல்
- முயற்சியாளர்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் கட்டுப்படுத்தல்
- போட்டிக்கெதிரான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல்
- வினைத்திறனான போட்டியினை மேம்படுத்தல்
- விலை, தரம் தொடர்பில் நுகர்வோரைப் பாதுகாத்தல்

இலங்கை கட்டளைகள் நிறுவனம்
- நியமங்களைத் தயாரித்தல்
- தர நியமங்களை நடைமுறைப்படுத்தல் (சுயாதீன, SLS சான்று ஏற்றுமதிப் பரிசோதனை, இறக்குமதிப் பரிசோதனை, கடலுணவுப் பரிசோதனை)
- ISO தர நியமத்தை நிடைமுறைப்படுத்தல்.
- தர நியமம், தரக்கட்டுப்பாடு தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்.
- நுகர்வோர் கல்வியினை மேமபடுத்தல்.

2) அ) கட்டுண்ட கடன் | அங்கீகார வணிகம்

- குறித்த உற்பத்தியாளனது பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டு ஏற்படுத்தும் ஒப்பந்தம். - குறித்த உற்பத்தரியளனுடைய வியாபாரக் குறியுடைய பொருட்களை உற்பத்தி செய்தல். விற்பனை செய்வதற்கு பெயரடும் முறைமை வணிகத்தை நடாத்துதல்.
- விற்பனைக்கு ஏற்ப கழிவு/ வழங்கப்படும் - அங்கீகாரம் பெற்றவர் அங்கீகாரம் வழங்கியவருக்கு இறை செலுத்துதல்
- பிணை செலுத்த வேண்டும் - ஆரம்ப கொடுப்பனவு செய்தல் வேண்டும்.
- உற்பத்தியாளனே மேம்படுத்தல் - அங்கீகாரம் பெற்றவரே மேம்படுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வர்.
- உற்பத்தியாளனால் கடன், உபகரண வசதி வழங்கப்படும் - முகாமைப் பயிந்சி, சந்தைப் படுத்தல் பயிற்சி, வியாபார நிலையத்தை அமைத்தல் போன்ற உதவிகள் வழங்கப்படும்.

ஆ) - கொள்வோரின் நோக்கம் - விலை - விற்பனை அளவு / பொருட்களின் எண்ணிக்கை
- மூலதன அளவு - கழிவு - அகத்தளகக் காலம் - அமைவிடம்

3) அ) ஏற்றுமதிக் கட்டமைப்பு | இறக்குமதிக்கட்டமைப்பு

- விவசாயப் பொருடகள் - நுகர்வுப் பொருட்கள்
- கைத்தொழிற் பொருட்கள் - இடைநிலைப் பொருட்கள்
- கனிப்பொருட்கள் - மூலதனப் பொருட்கள
- வகுக்கப்படாத பொருடகள் - வகுக்கப்படாத பொருட்கள்

ஆ) - நிலையான சந்தை வாய்ப்பு - விலையேற்ற இறக்கங்கள் பாதிப்பின்மை
- நாடுகளுக்கிடையிலான உவு மேம்படல்.

4) அ) நேர் உற்பத்தி - உற்பத்தி மிகை / பற்றாக்குறை - விருப்பத் தேர்வு - உற்பத்திக் கிரயம் - மேம்படுத்தல்

ஆ) மீள் ஏற்றுமதி | இறக்குமதி வியாபாரம்

- பண்டங்களின் இயல்பு, தன்மை உருவத்தில் மாற்றம் ஏற்படுத்தல் - உருவத்தில், தன்மையில் மாற்றம் செய்வதில்லை
- பண்டங்கள் நாட்டினுள் கொண்டு வரப்படும் - நாட்டின் துறைமுக எல்லைக்குள் மட்டும் கொண்டு வரப்படும்.
- இறக்குமதித் தீர்வைகள் செலுத்த - தீர்வைகள் செலுத்துவதில்லை

5) அ) - இலத்திரனியல் வணிகம் மூலம் வெளிநாட்டு வியாபாரம் உலகம் முழுவதும் விரிவடைதல்
- பொருளாதார அபிவிருத்திக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் சிறப்பாக முகங்கொடுப்பதற்கும் புதிய வியாபார வலயங்கள் (வியாபாரக் கூட்டுக்கள்) உருவாகுதல்.
- பாரம்பரிய ஏற்றுமதிகளில் தஙட்கழயராது நவீன உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய உற்பத்திகளைப் பன்முகப்படுத்தல்
- வியாபாரக் ௌள்கையில் ஈடுபடல்
- இலங்கையின் டீஏற்றுமதிப்பண்டப் பொது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல்

ஆ) - பண்டத் தெரிவுக்கு கூடிய வாய்ப்பு
- விரைலவாகவும் இலகுவாகவும் கட்டளை இட முடிதல்
- 24 மணி நேரமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடிதல்.
- ஒப்பீட்டு ரீதியில் உற்பத்தியின் விலை குறைவாக இருத்தல்.